# பேராதனைப் பல்கலைக்கழகம்

## விண்ணப்பங்களுக்கான அழைப்பு

## உபவேந்தர் பதவி

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்டிள் சட்டத்தின் 34 (1) ஆம் பிரிவின் பிரகாரமும், அதன் பின்னரான திருத்தங்களின் பிரகாரமும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 03/2023 இல் உள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேரவை, உபவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் விதியின் கீழ், உபவேந்தர் ஒரு முழுநேர அதிகாரியாக இருப்பார். மேலும், பிரதம நிறைவேற்று அதிகாரி, முதன்மைக் கல்வி அதிகாரி மற்றும் பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அதிகாரியாகவும் இருப்பார். அவர் ஒரு அலுவல்சார் உறுப்பினராகவும், பேரவை மற்றும் மூதவை இரண்டின் தலைவராகவும் இருப்பார்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் விதியின் கீழ் உபவேந்தர் பதவியிலிருந்து முன்னதாகவே பதவி விலகாவிட்டால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படாவிட்டால், மூன்று ஆண்டு காலம்வரை அல்லது அவர் தனது அறுபத்தைந்தாவது ஆண்டு நிறைவடையும் வரை பதவியில் இருப்பார்.

கல்வி விவகாரங்களை வழிநடத்துதல், முகாமைத்துவக் கொள்கைகளை நடத்துதல் மற்றும் அறிமுகப்படுத்துதல், பேரவை முடிவுகளை செயற்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகத்தை வழிநடத்துதல் ஆகியவற்றிற்கு உபவேந்தர் பொறுப்பாவார். கல்வியில் சிறந்து விளங்குதல், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக முகாமைத்துவ மற்றும் பயனுள்ள பக்கச்சார்பற்ற தலைமைத்துவம் ஆகிய கொள்கைகளை அவர் நிலைநிறுத்த வேண்டும்.

வெற்றிகரமான வேட்பாளர் ஒரு வலுவான ஆராய்ச்சி சுயவிவரம், நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகள் மற்றும் பல்வேறு ஆர்வக் குழுக்களுடன் புறநிலையாகத் தொடர்பு கொள்வதற்கான ஆளிடைத் திறன்கள், கொள்கைப் பிரச்சினைகள் குறித்த தெளிவான புரிதல் மற்றும் முடிவுகளைத் திறம்பட செயல்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு உள்ளிட்ட உயர் கல்விச் சாதனைகளின் பதிவைக் கொண்டிருக்க வேண்டும். மேலும், சமூகத்திற்கான அர்ப்பணிப்பு உட்பட பல்கலைக்கழகத்தின் நெறிமுறைகள் மற்றும் குறிக்கோள் பற்றிய ஆழமான புரிதலையும் அவர் கொண்டிருக்க வேண்டும். விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள், இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு பல்கலைக்கழக வலைத்தளத்தை (http://www.pdn.ac.lk) பார்வையிடுமாறு கோரப்படுகிறார்கள்.

பல்கலைக்கழக அமைப்பில் மிக உயர்ந்த கல்விச் சம்பளம், அடிப்படைச் சம்பளத்தில் 15% பொழுதுபோக்குக் கொடுப்பனவு, தகவல் தொடர்பு கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு போன்றவற்றைப் பெற உபவேந்தர் தகுதியுடையவர். இதுதவிர, அதிகாரபூர்வ வாகனம் மற்றும் உபவேந்தர் தங்கும் விடுதியும் வழங்கப்படும்.

**விண்ணப்பப் பத்திரங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்**

I) பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரரின் தகைமைத் திரட்டு (விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் மற்றும் இறுதித் திகதியில் 63 வயதிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்).

II) பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கான தனிப்பட்ட தொலைநோக்கு அறிக்கை மற்றும் உபவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டால், விண்ணப்பதாரர் என்ன சாதிக்க உத்தேசித்துள்ளார் என்பதற்கான சுருக்கமான அறிக்கை.

பேராதனைப் பல்கலைக்கழகம் 2042 ஆம் ஆண்டளவில் 100 ஆவது ஆண்டை எட்டவுள்ளதை முன்னிட்டு நூற்றாண்டு வளர்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. விண்ணப்பதாரர்கள் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கான பரிந்துரைகளைச் சேர்க்கலாம். மேற்குறிப்பிட்ட கருத்திட்டம் தொடர்பான மேலதிக விபரங்களைப் பேராதனைப் பல்கலைக்கழகப் பதில் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

III) விண்ணப்பதாரர் தற்போதைய உபவேந்தராகவோ அல்லது இதற்கு முன்னர் இப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவியை வகித்தவராகவோ இருந்தால், மேலே உள்ள பந்தி (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்கு மேலதிகமாக, அவரது பதவிக் காலத்தின் சாதனைகளை எடுத்துக்காட்டும் ஓர் அறிக்கை.

IV) இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகம் தவிர்ந்த அரச சேவை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் அல்லது உயர் கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரி ஒருவர், அப்பதவிக்கு நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரை விடுவிக்க முடியுமா என்பதைச் சுட்டிக்காட்டும் தொழில் வழங்குனரிடமிருந்து பெறப்பட்ட கடிதம்.

விண்ணப்பங்களை 07.02.2024 அன்று பிற்பகல் 3.30 மணிக்குள் பதில் பதிவாளர்/ பேரவையின் செயலாளர், மூதவைக் கட்டடம், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அல்லது பதிவாளர் அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையில் மேல் இடது மூலையில் “உபவேந்தர் பதவி” என்று குறிக்கப்பட வேண்டும்.

மேலும், PDF வடிவத்தில் விண்ணப்பத்தின் மென் நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை மேலே உள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் registrar@gs.pdn.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களின் இறுதித் தேதிக்குப் பிறகு இரண்டு மாதங்களுக்குள் ஒரு வேலை நாளில் ஒரு சிறப்புப் பேரவையின் கூட்டம் கூட்டப்படும். மேலும், மதிப்பீடு மற்றும் நேர்காணலுக்காகச் சிறப்புப் பேரவைக் கூட்டத்திற்கு முன் விண்ணப்பதாரர்கள் நேரில் அழைக்கப்படுவர். அனைத்து விண்ணப்பதாரர்களும் குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்கள் அதிகபட்சம் பதினைந்து (15) நிமிடங்கள் கால அளவில், சுருக்கமான முன்வைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எந்தவொரு விண்ணப்பதாரரும் சுகவீனம் காரணமாகவோ அல்லது வெளிநாட்டில் இருப்பதனாலோ சிறப்புப் பேரவைக் கூட்டத்திற்கு நேரில் ஆஜராக முடியாத நிலையில், செயலாளருக்கு முன்னறிவித்தால் நிகழ்நிலை முறையில் ஆஜராக அனுமதிக்கப்படுவார்.

10.04.2023 திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள பல்கலைக்கழக மானியக்குழச் சுற்றறிக்கை எண் 03/2023 இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையைப் பின்பற்றி தேர்வு இடம்பெறும். உபவேந்தர் பதவிக்கான நியமன நடைமுறை குறித்த கூடுதலான விபரங்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையினைப் பாரக்கவும்.

இறுதித் திகதிக்குப் பின்னர் பெறபப்டும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டா.

**பதில் பதிவாளர் மற்றம் பேரவைச் செயலாளர்,**

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

**07.01.2024**